# செம்மொழி

திருவள்ளுவர் ஆண்டு 2044 தை-மார்கழி (2013 சனவரி-திசம்பர்)

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 10 | வெளியீடு: சூலை 2021



செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனச் செய்திமடல் - 10
திருவள்ளுவர் ஆண்டு 2044 தை - மார்கழி (2013 சனவரி - திசம்பர்) | வெளியீடு: சூலை 2021

## பொருள் நிரல்

வாழ்த்துரை ........ 1
முதன்மை ஆசிரியர் உரை ........ 2
கூட்டங்கள் ........ 3
கருத்தரங்குகள் ........ 7
தொல்காப்பியமும் விகுதிகளும் – பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் ........ 15
பயிலரங்குகள் ........ 20
ஆய்வு உதவித்தொகைகள் ........ 27
செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருதுகள் ........ 28

**ஆசிரியர் குழு**

முதன்மை ஆசிரியர்
**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

ஆசிரியர்கள்
**முனைவர் அ. ஆரோக்கியதாசு**
**முனைவர் த. சரவணன்**
**முனைவர் சி. இராமச்சந்திரன்**
**முனைவர் இரா. வெங்கடேசன்**

தரவு உள்ளீடு
**திரு. அ. முருகேசன்**

தொழில்நுட்பம்
**திரு. த. செந்தில்குமார்**

வடிவமைப்பு
**திரு. க. சங்கர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனம் செம்மொழித் தமிழை மேம்படுத்தும் வகையில் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்தை அடிப்படையாகக்கொண்டு 12 புலங்களினூடாகக் (1.இலக்கியப் புலம், 2.மொழியியல் புலம், 3.மொழிபெயர்ப்புப் புலம், 4.அகராதியியல் புலம், 5.மொழிகள் - மொழிக்கல்விப் புலம், 6.வரலாறு, சமூகவியல், மாந்தவியல் புலம், 7. தொல்லியல் புலம், 8.சுவடியியல் புலம், 9.கல்வெட்டியல், நாணயவியல் புலம், 10.கலை, கட்டடவியல் புலம், 11.அயலகத் தமிழ்ப் புலம், 12.மொழித் தொழில்நுட்பப் புலம்) கீழ்க்காணும் முதன்மைத் திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1. 41 பழந்தமிழ் நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடல்
2. பழந்தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் ஐரோப்பிய மொழிகளிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்தல்
3. இணையவழியில் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
4. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம் உருவாக்கல்
5. வரலாற்று அடிப்படையிலும் இக்கால நோக்கிலும் தமிழ் வழக்காற்றுச் சொற்களைத் தொகுத்தல்
6. செம்மொழித் தமிழ் நூல்களுக்கான தரவகம் உருவாக்கல்
7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம் நிறுவுதல்
8. இந்தியாவை ஒரு மொழிப் புலமாக ஆய்வுசெய்தல்
9. செம்மொழித் தமிழின் பல்துறை ஆய்வுகளை மேம்படுத்தல்



அட்டைப் படம்:
**காந்தள் மலர்**

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600 113.
தொலைபேசி: 044 – 22540125 | மின்னஞ்சல்: chemmozhi@cict.in | இணையம்: www.cict.in

வைய மீன்றதொன் மக்க ளுளத்தினைக்
கையி னாலுரை கால மிரிந்திடப்
பைய நாவைய சைத்த பழந்தமிழ்
ஐயை தாடலை கொண்டு பணிகுவாம்.

- பள்ளியகரம் நீ. கந்தசாமிப் புலவர்



# வாழ்த்துரை

உலகம் முழுவதுமான தமிழாய்வாளர்களுக்கும் அவர்கள்தம் தமிழாய்வுப் பணிகளுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து வருகின்றது. இந்நிறுவனம் தமிழாய்வுப் பணிகளில் ஈடுபட்டு வரும் அறிஞர்களுக்கு வேண்டிய திசையைக் காட்டி இலக்கை அடையவும், ஆய்வுகள் சிறந்தோங்கவும் உதவிபுரிந்து வருவது சிறப்புக்குரியதாகும்.

சிறந்த ஆய்வுகளின் வழியாகத் தமிழின் தொன்மையும் தனித்தன்மையும் அனைவருக்கும் சென்றுசேர வேண்டும் என்பது என் நெடுங்கால விருப்பமாகும். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா. சந்திரசேகரன் அவர்கள் என் விருப்பத்தினை நிறைவேற்றும் வகையில் நிறுவனத்தை வழிநடத்தி வருகிறார். இவரின் தலைமையில் இந்நிறுவனம் புதிய பல வளர்ச்சிகளைக் கண்டு தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்நிறுவனத்தின் பன்முகச் செயல்பாடுகளை உள்ளடக்கியதாகச் செய்தி மடல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றுள் பத்தாவது இதழ் பொலிவுடன் வெளிவருகிறது. இத்தருணத்தில் இயக்குநர் அவர்களுக்கும் நிறுவனப் பணியாளர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(தெ. ஞானசுந்தரம்)**

துணைத்தலைவர்

> தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
> நீங்கா நிலனாள் பவற்கு.
>
> (குறள்.383)



# முதன்மை ஆசிரியர் உரை

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழாய்வுகளுக்குரிய பல்வேறு பணிகளைச் செவ்வனே வகுத்து, தம் நோக்கத்தையும் இலக்கையும் எட்டுவதற்குரிய கடமைகளைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது. தமிழுலகம் செம்மொழி நிறுவனத்தின் பணிகளையும், ஆய்வுகளையும் கூர்ந்து கவனித்து வருகின்றது. இதைக் கருத்தில் கொண்டு பல புதிய ஆய்வுத் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றோம்.

இயக்குநராக இருந்து வேண்டிய பங்களிப்பினை உரிய முறைகளில் நல்கி, கல்விப் பணியாளர்களையும், அலுவலகப் பணியாளர்களையும் நிறுவன வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்திச் செயலாற்றி வருகிறேன். நடுவண் அரசும் நிறுவன வளர்ச்சிக்குத் தேவையான நிதியுதவியை நன்முறையில் நல்கி வருகிறது. இவற்றை உரியமுறையில் பயன்படுத்திக்கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை நன்னிலைக்கு உயர்த்துவது நமது அனைவரின் கடமையாகும்.

இச்சூழலில் நீண்டகாலமாக வெளியிடப்படாமல் நிலுவையில் இருந்த நான்கு (6, 7, 8, 9) செய்திமடல்களை 21.12.2020 அன்று வெளியிட்டு நிறுவனச் செயல்பாட்டைத் தமிழுலகத்திற்கு அறியச் செய்தோம். எஞ்சிய செய்திமடல்களும் தற்போது வெளியிடப்படுகின்றன.

இந்த இதழ், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுத் திட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், முனைவர் பட்டம் மற்றும் முனைவர் பட்ட மேலாய்வு உதவித் தொகைகள் குறித்த செய்திகளையும், அத்திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற வல்லுநர்குழுக் கூட்டக் குறிப்புகளையும் தாங்கி வருகிறது.

2009-10, 2010-11ஆம் ஆண்டுகளுக்குரிய செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதாளர்களின் செய்திகளும், ஆய்வாளர்களுக்குத் துணைநிற்கும் வகையில் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களின் ‘தொல்காப்பியமும் விகுதிகளும்’ என்ற ஆய்வுக் கட்டுரையும் இந்தச் செய்திமடலில் இடம்பெற்றுள்ளன.

நிறுவனத்தின் பல்வேறு ஆக்கச் செயல்களை உள்ளடக்கிய இவ்விதழ் வெளிவருவதற்குரிய பணிகளைச் செவ்வனே செய்து முடித்த ஆய்வாளர்களுக்கும், அவர்களுக்குத் துணைநின்ற தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இரா. சந்திரசேகரன்)**
இயக்குநர்

# கூட்டங்கள்

## 1 குறுந்திட்ட ஆய்வுகளைத் தெரிவுசெய்யும் குழுக் கூட்டம்

*2013-14ஆம் ஆண்டு நிதிநல்கைக்குரிய குறுந்திட்ட ஆய்வுகளைத் தெரிவுசெய்வதற்கான முதற்கட்டத் தெரிவுக் குழுக் கூட்டம் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 20.09.2013, 26.09.2013 ஆகிய நாள்களில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,*

**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
**பேராசிரியர் அரங்க. இராமலிங்கம்**
**பேராசிரியர் அன்னிதாமசு**
**முனைவர் கி. ஜெயகுமார்**



*ஆகியோர் தெரிவுக்குழு வல்லுநர்களாகச் செயல்பட்டனர். இக்கூட்டத்தில் குறுந்திட்ட ஆய்வு மேற்கொள்ள விண்ணப்பிக்கப் பெற்றிருந்த 193 ஆய்வுத் திட்டங்களிலிருந்து 58 ஆய்வுத் திட்டங்கள் தெரிவுசெய்யப் பெற்று அவ் ஆய்வாளர்களை வல்லுநர் குழுவின் முன் தம் ஆய்வுத் திட்டங்களை வழங்க அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.*

## 2 குறுந்திட்ட ஆய்வாளர்களுக்கான நேர்காணல்

*வல்லுநர் குழுவால் தேர்வுசெய்யப்பட்ட குறுந்திட்ட ஆய்வாளர்கள் 58 பேருக்கும் 11.10.2013, 28.11.2013, 29.11.2013 ஆகிய நாள்களில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நேர்காணல் நடத்தப்பட்டது.*

**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**பேராசிரியர் தெ. ஞானசுந்தரம்**
**பேராசிரியர் சு. வேங்கடராமன்**
**பேராசிரியர் அன்னிதாமசு**
**பேராசிரியர் த. வசந்தாள்**

*ஆகியோர் நேர்காணல் செய்தனர். இந்நேர்காணல் வழி 44 ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பெற்றனர். தேர்வுசெய்யப்பெற்ற இவ்வாய்வாளர்களால் 38 ஆய்வுத்திட்டங்கள் ஆராய்ந்து முடிக்கப்பட்டு நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:*

1. *முனைவர் இரா. ஜானகி*
   **- தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் கல்வியியல்**
2. *முனைவர் ஜெ. இராஜா முகம்மது*
   **- பண்டைய புதுக்கோட்டையின் வரலாறும் பண்பாடும் (கி.பி.6ஆம் நூற்றாண்டு வரை)**
3. *முனைவர் கோ. சீனிவாச வர்மா*
   **- திருக்குறள் - வாக்ரிபோலி மொழிபெயர்ப்பு**
4. *முனைவர் தி. முருகரத்தனம்*
   **- அனைந்திந்திய வரலாற்று அறிவுநெறிச் சூழ்புலத்தில் வள்ளுவரது முப்பாலின் இடம்**
5. *முனைவர் ந. விஜயசுந்தரி*
   **- சங்க இலக்கியமும் இக்கால நாடக மறு ஆக்கமும்**

6. முனைவர் பா. சாந்தி
**- சங்க இலக்கியம் காட்டும் பரத்தையர் வாழ்வும் இரட்டைக் காப்பியங்கள் காட்டும் பரத்தையர் வாழ்வும் - ஓர் ஒப்பீடு**

7. முனைவர் அ.அ. ஞானசுந்தரத்தரசு
**- சங்க இலக்கியங்களில் கற்றல் கற்பித்தல் கொள்கைகள்**

8. முனைவர் ந. வேலம்மாள்
**- தொல்காப்பியரின் பெண் கருத்தமைவும் சங்கப் பெண் கவிஞர்களின் ஏற்பும் விலக்கலும்**

9. முனைவர் பி.எஸ். சுப்பிரமணியன்
**- திராவிட ஒப்பிலக்கணம் - 3**

10. முனைவர் நயம்பு. அறிவுடைநம்பி
**- திருக்குறளும் தரும தீபிகையும் - ஓர் ஒப்பாய்வு**

11. முனைவர் அ. ஸ்ரீகண்டன்
**- செவ்வியல் இலக்கியங்களில் கொற்றவையும் குமரிமாவட்டக் கொற்றவை வழிபாடும்**

12. முனைவர் சு. தங்கமுத்து
**- சங்க காலச் சோழர் தலைநகரம் - ஆவூர் மாநகரம் மறைந்த மறக்கப்பட்ட மாநகரம் - வரலாற்றுப் பார்வை**

13. முனைவர் அ.சு. இளங்கோவன்
**- செவ்விலக்கிய விழுமியங்கள் பற்றிய ஆங்கிலத் தொகுப்பு: அழகியலும் கவிதையியலும்**

14. முனைவர் பா. சத்யா
**- செவ்வியல் நூல்களில் அளவைகள்**

15. முனைவர் தி. தாமரைச்செல்வி
**- இலக்கிய இதழ்கள்வழித் திருக்குறள் ஆராய்ச்சி (1951 முதல் 2000 வரை)**

16. முனைவர் இந்திரா மனுவேல்
**- செவ்விலக்கியத்தில் புறம் - கட்டமைப்பு நிலையும் கோட்பாட்டு நிலையும்**

17. முனைவர் கோ. சாந்தி,
முனைவர் எஸ். குருஞானாம்பிகா
**- திருக்குறளும் கிருந்தாவளியும்**

18. முனைவர் அ. இலட்சுமி தத்தை
**- இலக்கணக் கோட்பாடும் சங்க இலக்கியக் கூற்றுகளும் பெண்சமூக உருவாக்கமும்**

19. முனைவர் த. கவிதா
**- பாலக்காடு வட்டாரப் பழங்குடியினர் மொழிகளில் பழந்தமிழ் வழக்காறுகள்**

20. முனைவர் இரா. கண்ணன்
**- மணிமேகலை அகராதி**

21. முனைவர் மா. பத்மபிரியா
**- சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புணர்வு**

22. முனைவர் வி.ஜி. விஜயரங்கம்
**- கி.பி.6ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட விழுப்புரம் மாவட்ட வரலாறும் தொல்லியல் சின்னங்களும்**

23. முனைவர் எஸ். கற்பகம்
**- சங்க இலக்கியங்கள் காட்டும் ஆடல் திறன்கள்**

24. முனைவர் வே. சீதாலெட்சுமி
**- சங்க இலக்கியங்களில் புறத்திணை அமைவு**

25. முனைவர் ம.செ. இரபிசிங்
**- பழந்தமிழகத்தில் நிகழ்த்துக் கலைகள் - நாடகத்தை முன் வைத்து**

26. முனைவர் கு. கருமுருகானந்த ராஜன்
**- செம்மொழி இலக்கியங்களில் போர் மேலாண்மை**

27. முனைவர் த. கருப்பையா
**- பண்பாட்டு மானிடவியல் நோக்கில் பதினெண்கீழ்க்கணக்குப் பனுவல்கள்**

28. முனைவர் குளோரியா வி.தாஸ்
**- சங்க இலக்கியங்களில் கடவுள் கருத்துருவாக்கம்**

29. முனைவர் கி. பார்த்திப ராஜா
**- சங்க மறவர் போர் அறம் - நாடகப் பனுவல் உருவாக்கம்**

30. முனைவர் ஆர். சிவசங்கரி
**- பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் தனிமனித ஆளுமைக் கூறுகளும் சமூக மேன்மையும்**

31. முனைவர் அ. சதீஷ்
**- பிற்கால இலக்கண நூல்களில் தொல்காப்பியத்தின் தாக்கம் - எழுத்து, சொல்லிலக்கண ஆய்வு**

32. முனைவர் கே. பழனிவேலு
**- எடுத்துரைப்பியல் நோக்கில் சங்க அகப்பாடல்களின் திணை வரையறை (அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகை நூல்களின் முல்லை, நெய்தல், பாலைத் திணைப் பாடல்களை முன்வைத்து)**



33. முனைவர் இரா. விஜயராணி
- **மணிமேகலைக் காப்பியத்தில் கதை மாந்தர்கள்**

34. முனைவர் ப. டேவிட் பிரபாகர்
- **சங்கப் பனுவல்: சொல்வகைகளின் வருகையும் பகிர்வும் - புள்ளியியல் நோக்கு**

35. முனைவர் கலை. செழியன்
- **சங்க இலக்கியத்தில் காணப்படும் சட்டவியல் நெறிமுறைகள்**

36. முனைவர் ப. கொழந்தசாமி
- **தொல்காப்பிய எழுத்ததிகாரப் பொருண்மையியல் செய்திகள்**

37. முனைவர் ஆ. விஜயராணி
- **ஒப்பியல் நோக்கில் சங்க இலக்கியப் பாடல்களில் புலவர்கள் - அரசர்கள் உறவுநிலை**

38. முனைவர் தி. அன்புச்செல்வன்
- **சங்கப் பனுவல்களில் தொல்குடிக் கூறுகள்**

## 3 குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டு வருவோரின் ஆய்வுகளை மதிப்பீடு செய்வதற்கான கூட்டம் 24.07.2013 அன்று நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் கு. சிவமணி**
**பேராசிரியர் இரெ. குமரன்**
**பேராசிரியர் ப. மகாலிங்கம்**
**பேராசிரியர் அரங்க ராமலிங்கம்**
**முனைவர் மு. முத்துவேலு**

ஆகியோர் மதிப்பீட்டுக் குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டு ஆய்வுத்திட்டங்களை மதிப்பீடு செய்தனர். இக்கூட்டத்தில் மதிப்பிடப்பெற்ற திட்ட அறிக்கைகள் வருமாறு:

1. முனைவர் எஸ். சுஜாதா
- **விளவங்கோடு வட்டார வழக்கு அகராதி**

2. முனைவர் மேரி பியர் அகஸ்டின்
- **நாலடியார் - பிரெஞ்சு மொழிபெயர்ப்பு**

3. திரு. டிராஸ்கி மருது
- **சங்க இலக்கிய அசைகலைக் குறும்படங்கள் (5 குறும்படங்கள்)**

4. திரு. தேவ பேரின்பன்
- **தமிழர் தத்துவத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரை) - தத்துவ வரலாற்றியல் பார்வையில்**

5. முனைவர் பழ.முத்தப்பன்
- **சங்க இலக்கியத்தில் சைவசமய மூலக்கூறுகள்**

6. பேராசிரியர் உள்ளூர் எம். பரமேஸ்வரன்
- **ஐங்குறுநூறு - மலையாள மொழிபெயர்ப்பு**

7. முனைவர் தே. வேலப்பன்
- **சங்கத் தமிழர்களின் பொருளியல் வாழ்வும் சிந்தனையும்**

8. முனைவர் பி. கிருஷ்ணமூர்த்தி
- **பழந்தமிழ் இலக்கியங்களில் மனித உரிமைக் கருத்துகள்**

9. முனைவர் இளமதி சானகிராமன்
- **பண்டைய இலக்கண இலக்கியங்களில் மெய்ப்பாடுகள்**

10. முனைவர் ந. ஜெயபிரகாஷ்
- **கச்சாயணம் - பாலி இலக்கணம்: மொழிபெயர்ப்பும் தொல்காப்பிய ஒப்பீடும்**

11. திரு மு. பாலசுப்பிரமணியன், திரு. நா. மம்மது
- **தமிழ்த் திணையியல் களஞ்சியம்**

12. முனைவர் ஆ.இரா. வேங்கடாசலபதி
- **உ.வே. சாமிநாதையர் அவர்களுக்கு வந்த கடிதத் தொகுப்பு (1860-1942)**

13. முனைவர் மா . கோவிந்தராஜன்
- **சங்க இலக்கியம் - இந்தி மொழிபெயர்ப்பு**

14. முனைவர் அரங்க. மல்லிகா
- **மணிமேகலைக் காப்பியத்தில் பௌத்தக் கலை பண்பாட்டு விழுமியங்கள்**

15. முனைவர் ந.வேலுசாமி
- **பழந்தமிழகக் கோயில்களும் கலைகளும் (கி.பி.6ஆம் நூற்றாண்டிற்கு முன்)**

16. முனைவர் வி. ஜெயலட்சுமி
- **பெருங்கதையில் சங்க இலக்கியக் கூறுகள்**

17. முனைவர் பெ. சுயம்பு
- **உ.வே.சா. நூலகச் செவ்வியல் சுவடிகள், அச்சு நூல்களின் ஆய்வடங்கல் (விளக்க நூற்றொகை)**

18. முனைவர் இரா. மதிவாணன்
- **பிற இந்திய மொழிகளில் பழந்தமிழ்ச் சொற்கள்**

## 4 குறுந்திட்ட ஆய்வு மதிப்பீட்டுக் குழுக் கூட்டம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையின்கீழ் ஆய்வுத்திட்டங்களை மேற்கொண்டு வருவோரின் ஆய்வுகளை மதிப்பீடு

செய்வதற்கான கூட்டம், 18.10.2013 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில்,

**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**பேராசிரியர் கு. சிவமணி**
**பேராசிரியர் ப. மகாலிங்கம்**
**பேராசிரியர் த. வசந்தாள்**
**பேராசிரியர் அன்னிதாமசு**

ஆகியோர் மதிப்பீட்டுக்குழு வல்லுநர்களாகக் கலந்துகொண்டு ஆய்வுத்திட்ட அறிக்கைகளை மதிப்பீடு செய்தனர். இக்கூட்டத்தில் மதிப்பிடப்பெற்ற திட்ட அறிக்கைகள் வருமாறு:

1. முனைவர் உள்ளூர் எம். பரமேஸ்வரன்
   **- ஐங்குறுநூறு - மலையாள மொழிபெயர்ப்பு**
2. முனைவர் வி. செடிப்பவுன்
   **- செவ்வியல் இலக்கியங்களில் குழந்தை**
3. முனைவர் ஸ்ரீகுமார்
   **- குமரி மாவட்டத்தில் வழங்கும் செவ்வியற்றமிழ்க் கூறுகள்**
4. முனைவர் ஆ. மணி
   **- பழந்தமிழ் இலக்கண இலக்கிய உரைகளில் குறுந்தொகை**
5. முனைவர் எஸ். வீரலட்சுமி
   **- சங்க அகப்பாடல்களில் உணர்வுசார் அறிவு**
6. முனைவர் பி.சி. கோகிலா
   **- திருக்குறள் - குஜராத்தி மொழிபெயர்ப்பு**
7. திரு.நா. நந்திவர்மன்
   **- பிரெஞ்சுக் காலனியக் காலத்திலும் விடுதலைக்குப் பிந்திய காலத்திலும் (21ஆம் நூற்றாண்டு வரை) அயல்நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் செவ்வியல் நூல்களின் மொழிபெயர்ப்புகள்**
8. முனைவர் ந. கடிகாசலம்
   **- சங்கப் பாடல்களும் சீனப் பாடல்களும்**
9. முனைவர் எஸ். இராஜா
   **- சிலப்பதிகாரத்தில் சொல்லமைப்பு**
10. முனைவர் கி. அரங்கன்
   **- குறுந்தொகையில் உருபு-தொடரனியல் ஆய்வு: சங்க மொழியின் தன்மையினை ஆராய்வதற்கு ஒரு தொடக்க முயற்சி**
11. முனைவர் அ. அறிவுநம்பி
   **- தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் முருகனியம்**

## செம்பதிப்புத் திட்டக் கலந்தாய்வுக் கூட்டம்

ஐங்குறுநூறு - செம்பதிப்புக்கான கலந்தாய்வுக் கூட்டம் 01.08.2013 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது.

**பேராசிரியர் க. இராமசாமி**
**பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி**
**முனைவர் கி. ஜெயகுமார்**
**முனைவர் சு. சௌந்தரபாண்டியன்**
**பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**
**பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன்**

ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



# கருத்தரங்குகள்

## கருத்தரங்கம் 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாகர்கோவிலிலுள்ள தெ.தி. இந்துக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் நிகழ்த்துக் கலைகளும் அவற்றின் நீட்சியும்'** என்னும் தலைப்பில் 03.01.2013 முதல் 05.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் டி.வி. ஜெகதீசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை இலயோலா கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் தொல்காப்பிய மரபு மீறல்கள்'** என்னும் தலைப்பில் 07.01.2013 முதல் 09.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சி.அ. இராசராசன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 3

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து **'இளம்பூரணர், சேனாவரையர் உரை மரபுகள்'** என்னும் தலைப்பில் 09.01.2013 முதல் 11.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் பி. ஞானம் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 4

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கும்பகோணம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்வியல்'** என்னும் பொருண்மையில் 09.01.2013 முதல் 11.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் க. துரையரசன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 5

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சியில் உள்ள தூய வளனார் கல்லூரி வரலாற்றுத் துறையும் இணைந்து **'பண்டைய இந்திய வரலாற்றுக்குச் சங்கம் மற்றும் சங்கம் மருவிய காலத் தமிழ் இலக்கியங்களின் பங்களிப்பு'** என்னும் பொருண்மையில் 09.01.2013 முதல் 11.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் எம். ஆரோக்கியசாமி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 6

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அகராதியியல் துறையும் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறையும் இணைந்து **'காலந்தோறும் தமிழ் வழக்காறுகள்'** என்னும் தலைப்பில் 09.01.2013 முதல் 11.01.2013 முடிய மூன்று நாள் கருத்தரங்கை நடத்தின.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 09.01.2013 அன்று காலை 10 மணியளவில் தொடங்கியது. முனைவர் ச. மனோகரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். மதுரை காமராசர்






பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் கல்யாணி மதிவாணன் அவர்கள் தலைமை தாங்கினார். பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள் சிறப்புரையாற்றினார். பேரா. வீ. ரேணுகா தேவி அவர்கள் நன்றிகூறத் தொடக்கவிழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**முனைவர் இரா. கோதண்டராமன்**
**பேராசிரியர் க.ப. அறவாணன்**
**முனைவர் ச. மனோகரன்**
**பேராசிரியர் அ. சீனிவாசன்**
**முனைவர் இரா. குமாரசாமி**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் சொ. சாந்தலிங்கம்**
**பேராசிரியர் வீ. ரேணுகாதேவி**
**செல்வி கே.கே. இலட்சுமிப் பிரியா**
**பேராசிரியர் வ. ஞானசுந்தரம்**
**முனைவர் ந. நடராசப் பிள்ளை**
**முனைவர் கா. உமாராஜ்**
**முனைவர் எம்.ஏ. சிவராமன்**
**முனைவர் இளவரசன்**
**திரு. பி. ஜெயச்சந்திரன்**

கருத்தரங்க நிறைவு விழா 11.01.2013 அன்று மாலை நடைபெற்றது. இவ்விழாவில் பேராசிரியர் வீ. ரேணுகாதேவி வரவேற்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மொழியியல் துறைத்தலைவர் முனைவர் இரா. கோதண்டராமன் தலைமை தாங்கினார். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் முன்னாள் துணை இயக்குநர் பேராசிரியர் வ. ஞானசுந்தரம் நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். இறுதியாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அகராதியியல் துறைத்தலைவர் முனைவர் ச. மனோகரன் நன்றி நவில விழா இனிதே நிறைவுற்றது.

## கருத்தரங்கம் 7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் ஆத்தூர் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களில் சமயச் சார்பின்மை'** என்னும் தலைப்பில் 22.01.2013 முதல் 24.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் மு. முருகேசன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 8

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேரள மாநிலம் பாலக்காட்டில் உள்ள அரசுக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'கேரளப் பண்பாட்டு உருவாக்கத்தில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களின் பங்களிப்பு'** என்னும் தலைப்பில் 23.01.2013 முதல் 25.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஜி. முத்துலட்சுமி அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 9

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளியில் உள்ள கலைக்காவிரி கவின்கலைக் கல்லூரி இசைத்துறையும் இணைந்து **'தமிழ்க் காப்பிய மரபில் இசையும் நடனமும்'** என்னும் தலைப்பில் 23.01.2013 முதல் 25.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் வீ. வெங்கடலட்சுமி அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 10

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவண்ணாமலை அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'செவ்வியல் தமிழ் இலக்கியத்தில் அறத்தின் ஆட்சியும் மாட்சியும்'** என்னும் தலைப்பில் 28.01.2013 முதல் 30.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் வே. நெடுஞ்செழியன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 11

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'சிலப்பதிகாரம்: ஆசிரியர் கூற்றும் கதைமாந்தர்கள் கூற்றும்'** என்னும் தலைப்பில் 29.01.2013 முதல் 31.01.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ப. பெண்ணரசி அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 12

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை இராணிமேரி கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்விலக்கியப் படைப்புகளில் செய்தியியல் கூறுகள்'** என்னும் தலைப்பில் 30.01.2013 முதல் 01.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஆர். அனுராதா அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 13

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் அரியலூர் அரசுக் கலைக் கல்லூரி வரலாற்றுத் துறையும் இணைந்து **'செவ்வியல் காலக் கல்வெட்டுகளும் அகழாய்வுகளும் (கி.பி. 600 வரை)'** என்னும் தலைப்பில் 30.01.2013 முதல் 01.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் இல. தியாகராஜன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 14

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரைச் செந்தமிழ்க் கல்லூரியும் இணைந்து **'செந்தமிழ் இதழில் வெளிவந்த செவ்வியல் ஆய்வுகள்'** என்னும் தலைப்பில் 31.01.2013 முதல் 02.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் மு. மீனா அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.




## கருத்தரங்கம் 15

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டைத் திலகவதியார் திருவருள் ஆதீனமும் இணைந்து **'இயல், இசை, நாடகத்திற்குத் தமிழின் கொடை'** என்னும் தலைப்பில் 04.02.2013 முதல் 06.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. தவத்திரு தயானந்த சந்திரசேகரன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 16

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து **'கணினியியல் தொழில்நுட்பங்களும் சங்க இலக்கிய ஆய்வுகளும்'** என்னும் தலைப்பில் 06.02.2013 முதல் 08.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் வ. தனலட்சுமி அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 17

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தஞ்சாவூரிலுள்ள தமிழவேள் உமாமகேசுவரனார்

கரந்தைக் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கிய இலக்கண ஆய்வு முன்னோடிகள்'** என்னும் பொருண்மையில் 11.02.2013 முதல் 13.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் த. மலர்க்கொடி இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இக்கருத்தரங்கின் தொடக்க விழா 11.02.2013 அன்று காலை 9 மணியளவில் தொடங்கியது. இவ்விழாவில் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திருமிகு நா. கலியமூர்த்தி அவர்களும் செயலாளர் திருமிகு ச. இராமநாதன் அவர்களும் முன்னிலை வகித்தனர். தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா. இராசாமணி தலைமை தாங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் கு. சிவமணி வாழ்த்துரை வழங்கினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ம. திருமலை சிறப்புரை ஆற்றினார். தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரித் தமிழ் இணைப் பேராசிரியர் ஆ. காளிதாசு நன்றி நவில விழா நிறைவடைந்தது.

இந்தக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**முனைவர் இரா. வெங்கடேசன்**
**முனைவர் சு. மாதவன்**
**முனைவர் அரங்க. சுப்பையா**
**முனைவர் செ. கல்பனா சேக்கிழார்**
**முனைவர் இரா. திராவிடராணி**
**முனைவர் இல. பொம்மி**
**முனைவர் அ. ஆலிஸ்**
**முனைவர் பா. நடராசன்**
**முனைவர் சே. செந்தமிழ்ப் பாவை**
**முனைவர் சு. இராஜாராம்**
**முனைவர் இரா. கலியபெருமாள்**
**முனைவர் மு. கண்ணையன்**
**முனைவர் வெ. தமிழரசி**
**முனைவர் கோ.வெ.நடராசன்**
**முனைவர் கோ. தெய்வநாயகம்**
**முனைவர் சி. சித்ரா**
**முனைவர் மோ. தமிழ்மாறன்**
**முனைவர் நா. தனராசன்**
**முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**
**முனைவர் அ. குணசேகரன்**
**முனைவர் நா. காமராசு**

13.02.2013 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் இக்கருத்தரங்கின் நிறைவு விழா நடைபெற்றது. இதில் முனைவர் த. மலர்க்கொடி வரவேற்புரை ஆற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் கு.வெ. பாலசுப்பிரமணியன் கருத்தரங்க நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் ஆ. காளிதாசு கருத்தரங்க மதிப்பீட்டுரை வழங்கினார். தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கல்லூரி முதல்வர் இக்கருத்தரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டிப் பேசினார். இறுதியாக முனைவர் சா. செந்தில்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

## கருத்தரங்கம் 18

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடியியல் துறையும் இணைந்து **'எட்டுத்தொகை அக இலக்கியங்களில் காணப்படும் பாடவேறுபாடுகளும் அவற்றின் பாட மீட்டுருவாக்கமும்'** என்னும் பொருண்மையில் 19.02.2013 முதல் 21.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் மோ.கோ. கோவைமணி அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 19

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளி பிஷப் ஹீபர் கல்லூரித் தமிழாய்வுத் துறையும் இணைந்து **'திருக்குறள் ஒரு சமூக அறிவியல்'** என்னும் பொருண்மையில் 19.02.2013 முதல் 21.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் தி.வெ. இராசேந்திரன் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 20

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி பிரெஞ்சிந்திய ஆய்வு நிறுவன இந்தியவியல் துறையும் இணைந்து **'நிகழ்காலத்தில் கடந்தகாலம்: தமிழ் இலக்கணமும் அதன் தற்கால இடர்ப்பாட்டு நிலையும்'** என்னும் பொருண்மையில் 20.02.2013

முதல் 22.02.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் ஒய். சுப்புராயலு இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 21




## கருத்தரங்கம் 22

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கமும் இணைந்து **'புறநானூற்றில் மானுட மேம்பாட்டுச் சிந்தனைகள்'** என்னும் பொருண்மையில் 02.03.2013 முதல் 04.03.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் சேயோன் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 23

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வரலாறு, சமூகவியல், மாந்தவியல் துறையும் உதகமண்டலத்தில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையமும் இணைந்து **'சமூகப் பண்பாட்டு வரலாற்றுப் பார்வையில் தொல்தமிழர் நாகரிகம்'** என்னும் தலைப்பில் 2013 மார்ச்சு 6,7,8 ஆகிய நாள்களில் தேசியக் கருத்தரங்கினை உதகமண்டலத்தில் உள்ள இளைஞர் விடுதியில் நடத்தின. வரலாறு சமூகவியல் மாந்தவியல் துறைத் தலைவர் முனைவர் ந. அரணமுறுவல் அவர்களும் பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் சி. மகேசுவரன் அவர்களும் இக்கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்களாகவும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணனும் இளநிலை ஆய்வு வளமையர் த. சரவணனும் இணை ஒருங்கிணைப்பாளர்களாகவும் செயல்பட்டனர்.



இந்தக் கருத்தரங்கின் தொடக்க விழா 06.03.2013 அன்று காலை ஒன்பது மணியளவில் தொடங்கியது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன ஆய்வறிஞர் முனைவர் ந. அரணமுறுவல் அனைவரையும் வரவேற்றார். சென்னைக் கோட்டை அருங்காட்சியகத் துணைக் கண்காணிப்பாளர் கு. மூர்த்தீசுவரி தொல்தமிழர் வரலாற்றை வெளிப்படுத்தும் கண்காட்சியினைத் திறந்து வைத்தார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் அவர், 'பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கை முறையை இக்காலத் தலைமுறையினர் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். அறிவியல் தொழில்நுட்பத் துறைக்குத் தேவையான பல கலைச்சொற்கள் தமிழில் உள்ளன. அவை மறைந்துபோனால் பண்பாடு சிதையும்' என்றார். உதகை அரசுக் கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் என். கோபி, உதகை எமரால்டு ஹைட்ஸ் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் ஜி. செல்வநாயகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். உதகமண்டலம் பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் சி. மகேசுவரன் நன்றிகூறத் தொடக்க விழா நிறைவடைந்தது.



இக் கருத்தரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**திரு பி. இராமநாதன்**
**திரு சிவ. பாலசுப்பிரமணி**
**பேராசிரியர் ஒ. முத்தையா**
**முனைவர் அர. பூங்குன்றன்**
**பேராசிரியர் சு. இராசவேலு**
**முனைவர் சி. மகேசுவரன்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் கு. மூர்த்தீசுவரி**
**பேராசிரியர் ஆர். மருதக்குட்டி**
**முனைவர் ந. அரணமுறுவல்**
**முனைவர் மு. இராமகிருஷ்ணன்**
**முனைவர் த. சரவணன்**
**திரு எம். பிரசன்னா**
**திருமிகு த. கானப்பிரியா**
**முனைவர் ச. அரவிந்தன்**
**திரு. நா.ப.ப. பழனிவேல் ராஜன்**
**பேராசிரியர் இ.கே. கோவிந்தவர்ம ராஜா**
**முனைவர் ரேதி தம்பட்டி**

இந்தியத் தொல்லியல் துறையின் சென்னைக் கோட்டை அருங்காட்சியகம் சார்பில் தொல்தமிழர் வரலாற்றை வெளிப்படுத்தும் கண்காட்சி இக்கருத்தரங்க நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்றது.

இக்கண்காட்சியில் ஆதிச்ச நல்லூர் அகழாய்வில் கிடைத்த பொருள்கள், தருமபுரி மாவட்டத்தில் உள்ள பெருங்கற்காலச் சின்னங்கள், மாமல்லபுரம் அருகே உள்ள சாலுவங்குப்பம் முருகர் கோவில் அகழாய்வு, தஞ்சை பெரியகோவில், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற தொல்தமிழரின் சிறப்பை விளக்கும் நிழற்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.




கருத்தரங்கின் முதல் நாள் மாலையில் கேரள மாநிலத்தின் பாரம்பரிய நடனமான பொட்டன் தையம் என்று அழைக்கப்படும் நெருப்பு நடனம் உதகை ஏ.டி.சி காந்தி விளையாட்டரங்கில் நடைபெற்றது. கோழிக்கோடு பல்கலைக்கழக நாட்டறிவுப் படிப்புப் பள்ளியின் பேராசிரியர் இ.கே. கோவிந்தவர்ம ராஜா தலைமையில் இராமச்சந்திர பணிக்கர் குழுவினர் பொட்டன் தையம் நாட்டுப்புற நடனத்தை நிகழ்த்தினர். புள்ளுவன் பாட்டு, தீயுழிச்சல் ஆகிய நிகழ்ச்சிகள் இரண்டாம் நாள் மாலை நடைபெற்றன.

உதகை அரசுக் கலைக் கல்லூரி, உதகை எமரால்டு ஹைட்ஸ் மகளிர் கல்லூரி, குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் பயிலும் முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் இக்கருத்தரங்கில் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

இக்கருத்தரங்கின் நிறைவு விழா 08.03.2013 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்றது. பழங்குடியினர் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் சி. மகேசுவரன் வரவேற்புரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி, முனைவர் இரா. இளவழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக முனைவர் ந. அரணமுறுவல் நன்றி நவில விழா இனிதே நிறைவடைந்தது.

## கருத்தரங்கம் 24

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன மொழித் தொழில்நுட்பத் துறை **'செவ்வியல் தமிழ்ச் சொல்வகைக் குறியீடு'** என்னும் தலைப்பில் 11.03.2013 முதல் 13.03.2013 முடிய மூன்று நாள் கருத்தரங்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க அறையில் நடத்தியது.

இக்கருத்தரங்கத் தொடக்க விழா 11.03.2013 அன்று காலை பத்து மணியளவில் நடந்தது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு அலுவலர் பேராசிரியர் க. இராமசாமி அனைவரையும் வரவேற்றார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பொறுப்பு இயக்குநர் பேராசிரியர் இரா. ஞானமூர்த்தி தலைமையுரை ஆற்றினார். மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் மொழித் தரவுச் சேர்த்தியத் தலைவர் முனைவர் எல். இராமமூர்த்தி




தொடக்கவுரை ஆற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் வாழ்த்துரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இணை ஆய்வறிஞர் கோ. பழனிராஜன் நன்றி நல்கத் தொடக்க விழா நிறைவுபெற்றது.

இக்கருத்தரங்கில் கீழ்க்காணும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினார்கள்.

**பேராசிரியர் வ. ஜெயதேவன்**
**திரு. எஸ். தென்னரசு**
**முனைவர் தனலட்சுமி**
**முனைவர் காமாட்சி**
**பேராசிரியர் ந. நடராஜப் பிள்ளை**
**பேராசிரியர் வீ. இரேணுகா தேவி**
**முனைவர் கே. விசுவநாதன்**
**முனைவர் வீர. அழகிரி**
**முனைவர் ச.பொ. சீனிவாசன்**
**திருமிகு ஆர். அமுதா**
**முனைவர் இரா. செயராமன்**
**பேராசிரியர் சுசீலா**
**திருமிகு பி.எஸ்.ஸ்ரீஜா**
**முனைவர் இரா. மனோகரன்**
**முனைவர் கா. உமாராஜ்**
**முனைவர் கிருஷ்ணகுமார்**
**பேராசிரியர் பெ. மாதையன்**
**முனைவர் பா. ஜெய்கணேஷ்**
**முனைவர் பா. ராஜா**
**முனைவர் கோ. சதீஷ்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**
**முனைவர் அ. பூலோகரம்பை**
**பேராசிரியர் ச. இராசேந்திரன்**
**முனைவர் அ. பரிமள காந்தம்**
**முனைவர் ஏ. எழில்வசந்தன்**
**முனைவர் அ. செந்தில்நாராயணன்**
**முனைவர் ப. டேவிட் பிரபாகர்**
**முனைவர் கி. ஜெயகுமார்**

13.03.2013ஆம் நாளன்று பிற்பகல் நடந்த நிறைவு விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன இளநிலை ஆய்வு வளமையர் முனைவர் பா.ராஜா வரவேற்புரை வழங்கினார். சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொற்கோ அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். பேராசிரியர் ந. தெய்வசுந்தரம் அவர்கள் நிறைவுரை நிகழ்த்தினார். நிறுவன இணை ஆய்வறிஞர் முனைவர் கோ. பழனிராஜன் கருத்தரங்கம் பற்றிய மதிப்பீட்டுரை வழங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிரலாளர் திரு. இரா. அகிலன் நன்றி நவின்றார்.



## கருத்தரங்கம் 25

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுதில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக இந்திய மொழிகள் மையத் தமிழ்ப்பிரிவும் இணைந்து **‘இந்திய இலக்கிய மரபுச் சூழலில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியம்’** என்னும் பொருண்மையில் 25.03.2013 முதல் 27.03.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் கி. நாச்சிமுத்து அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 26

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இலக்கணம் மற்றும் மொழியியல் துறை **‘மொழியியல் பார்வையில் தமிழ் எழுத்தியலும் சொல்லியலும்’** என்னும் பொருண்மையில் 25.03.2013 முதல் 27.03.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கருத்தரங்க அறையில் நடத்தியது.

பேரா. இரா. கோதண்டராமன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கின் தொடக்க விழாவில் முனைவர் பெ. செல்வக்குமார் வரவேற்புரை






வழங்கினார். பேரா. க. இராமசாமி வாழ்த்துரை வழங்கினார். பேரா. பெ. மாதையன் தொடக்கவுரை ஆற்றினார். பேரா. க. முருகையன் கருத்தரங்கப் பொருண்மை குறித்து அறிமுகவுரை ஆற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் பேரா. இரா. கோதண்டராமன் நோக்கவுரை நிகழ்த்தினார். முனைவர் மு. செல்வதுரை நன்றி நவிலத் தொடக்கவிழா நிறைவுற்றது.

இக் கருத்தரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

**முனைவர் இரா. சம்பத்**
**பேரா. த. பரசுராமன்**
**பேரா. அ. சீனிவாசன்**
**பேரா. ஆ. கார்த்திகேயன்**
**பேரா. பா.ரா. சுப்பிரமணியன்**
**பேரா. இரா. கோதண்டராமன்**
**பேரா. பெ. சுயம்பு**
**பேரா. செ.வை. சண்முகம்**
**பேரா கி. அரங்கன்**
**பேரா. அ.கோ. நடராசன்**
**பேரா. க. முருகையன்**
**பேரா. வ. ஜெயதேவன்**
**பேரா.ச. குருசாமி**
**முனைவர் கோ. சதீஸ்**
**முனைவர் மு. செல்வதுரை**
**முனைவர் ச. மனோகரன்**
**முனைவர் கோ. பழனிராசன்**
**முனைவர் பெ. செல்வக்குமார்**

27.03.2013 அன்று மாலை நிறைவு விழா நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேரா. இ.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் பேரா. மு. முத்துவேலு கருத்தரங்க மைய உரை ஆற்றினார். பேரா. இரா. கோதண்டராமன் மூன்று நாள்களாகக் கருத்தரங்கில் வாசிக்கப்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் குறித்து மதிப்பீட்டுரை வழங்கினார். முனைவர் கோ. பழனிராசன் நிறைவு விழாவுக்கு வரவேற்புரை ஆற்றினார். முனைவர் வ. மாரியப்பன் அனைவருக்கும் நன்றி நவின்றார்.

## கருத்தரங்கம் 27

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை இராணிமேரி கல்லூரிப் பொருளியல் துறையும் இணைந்து **'தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் பொருளியல் சிந்தனைகள்'** என்னும் பொருண்மையில் 26.03.2013 முதல் 28.03.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் அ. வெண்ணிலா அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 28

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை உலகத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வகமும் இணைந்து **'தொல்காப்பியரின் இலக்கியக் கோட்பாடும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியமும்'** என்னும் பொருண்மையில் 29.03.2013 முதல் 31.03.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. முனைவர் தி. முருகரத்தனம் அவர்கள் இந்தக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கருத்தரங்கம் 29

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரிப் பல்கலைக்கழக நிகழ்த்துக் கலைப்புலமும் இணைந்து **'சங்க அகப்பாடல்களில் காணலாகும் நாடக வெளிப்பாடுகள்'** என்னும் தலைப்பில் 04.12.2013 முதல் 6.12.2013 வரை மூன்று நாள்கள் கருத்தரங்கினை நடத்தின. பேராசிரியர் கரு.அழ. குணசேகரன் அவர்கள் இக் கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

# தொல்காப்பியமும் விகுதிகளும்

பேராசிரியர் ச. அகத்தியலிங்கம்

## தொல்காப்பிய நூற்பாக்கள்

தொல்காப்பியம் பால்காட்டும் விகுதிகள் பற்றிப் பல்வேறு இயல்களில் குறிப்பிட்டுச் செல்லும். குறிப்பாகக் கிளவியாக்கம், வினையியல் ஆகிய இயல்களில் இவை பற்றி அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கிளவியாக்கத்தில் ஐந்து சூத்திரங்களும் (488, 489, 490, 491, 492) வினையியலில் பதினைந்து சூத்திரங்களும் இவை பற்றி நேரடியாகப் பேசும்.

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள் பற்றியே பேசப்படுகின்றது. முதலில் ஐந்து சூத்திரங்களில் தமிழ்ப் பெயர்ச் சொற்களைத் திணை, பால் அடிப்படையில் பகுத்துப் பின்னர் அவற்றை வினைச்சொல் எவ்வாறு காட்டுகின்றது எனக் கூறும்போது,

> **னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்** (488)

போன்ற நான்கு சூத்திரங்களில் இவை பற்றிப் பேசுவார்.

இதைப் போன்றே வினையியலிலும் வினைகளை உயர்திணை வினை, அஃறிணை வினை, விரவுத்திணை வினை (சூத். 686) எனப் பகுத்துப் பின்னர் உயர்திணையைச் சார்ந்த தன்மை வினை, படர்க்கை வினை ஆகியவற்றைக் குறிப்பிட்டு அவற்றைக் காட்டும் விகுதிகள் பற்றிக் கூறுவார். உயர்திணையைச் சார்ந்த தன்மை வினை விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (687, 688, 689), ஆண்பால், பெண்பால், பலர்பால் விகுதிகளை மூன்று சூத்திரங்களிலும் (690, 691, 692), ஒன்றன்பால், பலவின்பால் விகுதிகளை இரண்டு சூத்திரங்களிலும் (701, 702), விரவுத்திணையைச் சார்ந்த முன்னிலை விகுதிகளை இரண்டு சூத்திரங்களிலும் (708, 709) கூறிச் செல்லுவார். மேலும் 693, 694, 696, 697, 703 ஆகிய சூத்திரங்களும் விகுதிகள் பற்றிப் பேசக் காணலாம்.

## கிளவியாக்கமும் வினையியலும்

கிளவியாக்கத்தில் படர்க்கை விகுதிகள் மட்டுமே பேசப்படுகின்றன என்பதும், ஆனால் வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இட விகுதிகளும் பேசப்படுகின்றன என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கனவாகும்.



இவை மட்டுமன்றிக் கிளவியாக்கத்தில் உயர்வு ஒருமை (honorific singular) பற்றியும் (சூத். 510) பேசுதல் காணலாம்.

> **ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
> **ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
> **வழக்கி னாகிய உயற்சொற் கிளவி**
> **இலக்கண மருங்கின் சொல்லாறல்ல**

என்ற தொல்காப்பிய நூற்பா இவை "இலக்கண மருங்கின் சொல்லாறல்ல" எனக் கூறிற்று. சங்க இலக்கியங்களில் இத்தகைய உயர்வு காட்டும் விகுதிகள் ஏராளமாக உள்ளன என்பது நினைவுகூரத்தக்கது.

வினையியலிலும், கிளவியாக்கத்திலும் விகுதிகள் பற்றிப் பேசப்படுவது பொருத்தமா என்ற வினாவும் எழுவது இயற்கையே. இதற்குக் காரணம் கூறப் புகுந்த தெய்வச்சிலையார் (சூத்.5), "அஃதேல் வினையியலுள்ளும், 'அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் - ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே' (வினையியல் சூத்.8) என ஓதுகின்றாராகலின் ஈண்டுக் கூறுவதற்குக் காரணம் என்னையெனின், 'வினையிற் றோன்றும் பாலறி கிளவியும் பெயரிற் றோன்று பாலறி கிளவியும் மயங்கல் கூடா' (வினையியல் சூத்.11) என வழூஉக் காக்கின்றாராகலின் அவை வழுவாமற் கூறுங்கால், அச்சொற்களின் இயல்பு அறிய வேண்டுமென்றே, அதற்காக ஈண்டுத் தோற்றுவாய் செய்தாரென்க. ஆண்மைப் பொருண்மைக்கண் வரும் பெயர்ச்சொற்கும், வினைச் சொற்கும் ஈற்றெழுத்துப் பலவுளவாயினும் அவையெல்லாங் கூறாது, னகரவொற்றொன்றனையுங் கூறினமையானும் தோற்றுவாய் செய்தவாறுணர்க.

இவ்வுரை முன்வருகின்றவற்றிற்கும் ஒக்கும்.'' எனக் கூறுவது காண்க. இது மட்டுமன்றி வேறொரு காரணமும் கூறலாம். பெயர்ச் சொற்களை இரு திணை ஐம்பாலாகப் பகுத்த பின்னர் அவற்றை எவ்வாறு தெரிந்து கொள்ளுவது என்ற நிலையிலும் இதனைக் கூற வேண்டியதாயிற்று எனவும் கொள்ளலாம்.

### கிளவியாக்கத்தில் தன்மை முன்னிலை குறிப்பிடாமை

கிளவியாக்கம் தொடர்பு இயைபு பற்றிக் கூறுவது. இந்நிலையில் படர்க்கை மட்டுமன்றித் தன்மையும், முன்னிலையும் பேசப்பட வேண்டும். ஆனால் இவை பற்றிக் கிளவியாக்கம் (தன்மைப் பன்மையில் உயர்திணையும், அஃறிணையும் வந்தால் எவ்வாறு என்பது தவிர, சூத்.43) எதுவும் கூறுவதில்லை. இது பற்றிக் கூறும் சேனாவரையர் (சூத். 11) 'சிறப்புடைப் பொருளைத் தான் இனிது கிளத்தல்' என்பதால் தன்மை, முன்னிலையையும் கொளல் வேண்டும் என்பார். படர்க்கை சிறப்புடையதால் அது பற்றிப் பேசப்படுகின்றது என்பது அவர் கருத்தாகும். படர்க்கை எத்தனை அளவுக்குச்சிறப்புடையதோ அத்தனை அளவுக்குத் தன்மையும், முன்னிலையும் சிறந்தனவாகும். எனவே இது காரணமாக இருக்க முடியாது. தொல்காப்பியர் முதல் சூத்திரத்தில் பெயர்ச் சொற்களை உயர்திணை, அஃறிணை எனப் பகுத்துப் பின்னர் அவற்றைப் பல்வேறு பால்களாகப் பகுத்த நிலையில் அவை பெயர்ச் சொற்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுவனவாக உள்ளன. அப்பெயர்கள் அனைத்தும் படர்க்கை என எண்ணிய நிலையில்தான் படர்க்கைக்குரிய விகுதிகளைத் தந்து சென்றார் எனக் கருதலாம். முன்னிலை, தன்மைப் பதிலிடு பெயர்கள் பற்றி எண்ணாத நிலையில் அவற்றோடு வரும் விகுதிகளையும் அவர் குறிப்பிடவில்லை. உண்மையில் அப்பெயர்ச் சொற்கள் அனைத்தும் படர்க்கையா என்பதும் விவாதத்திற்குரியதாகும். இத்தகைய பெயர்கள் அனைத்தும் இடம் சுட்டாத பெயர்களே அன்றிப் படர்க்கைக்கே உரியன எனக் கூறமுடியாது.

**நீ கண்ணன்** **நான் கண்ணன்**

போன்ற வாக்கியங்கள் பிழையுள்ளனவாகும்.

ஆனால் பெயரியலில் பெயர்ச் சொற்கள் மட்டுமின்றி எல்லாப் பதிலிடு பெயர்களும் பேசப்படுகின்றன. இந்நிலையில்தான் அவற்றோடு வரும் விகுதிகள் பற்றி வினையியலில் விரிவாகப் பேசப்படுகின்றது என முடிவு கட்டலாம்.

### வினையிலா அல்லது பெயரிலா?

கிளவியாக்கத்தில் கூறப்படும் இவ்விகுதிகள் வினையில் வருவனவா அல்லது வினையிலும், பெயரிலும் வருவனவா என்ற சர்ச்சை இலக்கண அறிஞர்களிடையே உண்டு.

**ஈற்றில்நின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்**
**தோற்றந் தாமே வினையொடு வருமே** *(493)*

எனத் தெள்ளத் தெளிவாக வினையோடுதான் வரும் என்று தொல்காப்பியர் கூறியபோதிலும் இவை வினையிலும், பெயரிலும் வரும் என்று சில அறிஞர்கள் கருதுவர்.

உரையாசிரியர்களில் தெய்வச்சிலையார் ஒழிந்த ஏனைய உரையாசிரியர்கள் அனைவருமே இவை வினையோடுதான் வரும் எனக் கருதுகின்றனர்.

**னஃகான் ஒற்றே ...............** *(488)*

என்ற சூத்திரத்திற்கு உதாரணம் கூறப் போந்த இளம்பூரணர் (கிளவியாக்கம் சூத்.5) உண்டான், கரியன் போன்ற உதாரணங்களைத் தந்து நிற்பார். இது போன்று ளஃகான் ஒற்றுக்கும், ''உண்டாள், கரியள் எனவும் வரும்'' என்று கூறுவதோடு ''வினையாலும் வினைக் குறிப்பாலும் மகடூஉவை விளக்கியவாறு அறிக'' (கிளவியாக்கம் சூத்.6) என்று குறிப்பிடுவார்.

இதே போன்று னகர இறுதியைப் பற்றிக் குறிப்பிடும்போதும் ''னகர இறுதியாய படர்க்கை வினைமுற்றுச் சொல்லால் உயர்திணை ஆண்பால் உணர்த்தப்படும்'' (கிளவியாக்கம் சூத்.5) என்றும் குறிப்பிடுவார்.

மேலும் பத்தாவது சூத்திரத்தில் ''வினையொடு வருமே'' எனத் தொல்காப்பியர் ஏன் விதந்து கூறினார் என்ற வினாவை எழுப்பி அதற்கு விடையாக ''வினையொடு வருமே'' என்றார், பெயர்க்கண் திரியவும் நிற்கும் திரியாமையும் நிற்குமாகலான் என்பது, உண்டான் என்றக்கால் திரிவில்லை. கொற்றன் என்பது இருதிணை யொருமைப் பாற்கும் ஏற்கும் என்பது'' என்று கூறுவார். எனவே இளம்பூரணர் இவ்விகுதிகள் அனைத்தும் வினைச்சொல்லிலேயே வந்து நிற்கும் எனக் கருதுவது வெள்ளிடைமலையாகும்.

இவரைப் பின்பற்றியே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இத்தகைய உதாரணங்களையே தந்து நிற்பர். இளம்பூரணர் -அன் சாரியைக்குப் பின்னர் வரும் விகுதிக்கு உதாரணம் தராதிருக்க, சேனாவரையர் உண்டனன் போன்ற உதாரணங்களைத் தருவார். இதைப் போன்றே வினைக்குறிப்பிற்கும் கரியான்

போன்ற -ஆன் ஈற்றுச் சொற்களையும் தருவார். இத்தகைய வேறுபாடுகளை இவர்களிடையே காணலாமேயன்றி அடிப்படையில் இவை வினையில் வரும் என்பதையே இளம்பூரணரும், சேனாவரையரும், பிறரும் கருதுகின்றனர்.

மேலும் சேனாவரையர் பத்தாவது சூத்திரத்தில் இளம்பூரணரைப் பின்பற்றி "இவை பெயரொடு வருவழித் திரிபின்றிப் பால் விளக்காமையின் வினையொடு வரும் என்றார்" என்று கூறுவதும் குறிப்பிடத்தக்கது.

சேனாவரையரைப் பின்பற்றியே நச்சினார்க்கினியரும் வினை, வினைக்குறிப்பு ஆகியவற்றிற்கு உதாரணங்கள் தருவார். சேனாவரையர் கொடுக்கும் அதே உதாரணங்களையே இவரும் தந்து நிற்பார்.

"வினையியலுள் வினைக்கு ஈறு பற்றி ஓதிப் பெயரியலுள் பெயர்கள் தம்மை எடுத்து ஓதினமையாலும், இப் பதினோரீறும் பெயர்க்கண் திரிபுடையவாய் வருதலானும் பெயர்க்கு இவ்வீறுகள் கோடல் ஆகாமை உணர்க" எனக் குறிப்பிடுவது இவருடைய முடிபைக் காட்டும். அதே நிலையினைத்தான் கல்லாடனாரிடமும் காணுகிறோம்.

ஆனால் தெய்வச்சிலையாரோ இவ்விகுதிகள் வினையிலும், பெயரிலும் வரும் என எண்ணுவார். எனவேதான் இவற்றிற்கு உதாரணம் தரும்போது "உண்டான், உண்ணாநின்றான், உண்பான் இவை வினைச்சொல். கரியன், நெடியன் இவை வினைக்குறிப்பு. பாண்டியன், மாயவன் இவை பெயர்." எனக் கூறுவதிலிருந்து இவை பெயருக்கும் வரும் என எண்ணுவது விளங்கும். இதே போன்றுதான் எல்லா விகுதிகளுக்கும் உதாரணங்களைத் தருவார். எனினும் சில விகுதிகளுக்குப் பெயரில் உதாரணங்கள் தரமுடியாமல் மயங்கி நிற்பதையும் காணலாம்.

**தோற்றந்தாமே வினையொடு வருமே**

என்ற அடிக்கு விளக்கம் கூறும் முகத்தான் "தோற்றமாக என்பது "பெரிதாக" என்பது குறித்து நின்றது. எனவே "பெயரொடு வருதல்" சிறுவரவிற்று என்று கொள்ளப்படும்" *(கிளவியாக்கம் சூத்.10)* எனக் குறிப்பிட்டுச் செல்லுவார்.

எனவே இதுகாறும் கூறியவற்றால் இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடனார், நச்சினார்க்கினியர் ஆகியோர் இவ்விகுதிகள் வினையொடு வரும் என்றும் தெய்வச்சிலையார் பெயருடனும் வரும் என்றும் கருதுவர் என்று கருதலாம்.

தொல்காப்பியம் முழுவதும் ஆராய்ந்து நோக்கின் இவை வினையுடன் வரும் எனக் கருதுவதே பொருந்தும் எனத் தோன்றுகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி "வினையொடு வருமே" எனத் தொல்காப்பியர் திட்டவட்டமாகக் குறிப்பிடுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

"னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்" போன்ற சூத்திரங்களில் காணப்படும் விகுதிகளையே வினையியலில் மீண்டும் தொல்காப்பியர் கூறிச் செல்லுவார். இவ்விகுதிகள் பெயர்களிலும் வரும் எனக் கொண்டால் வினையியலில் கூறியது போலவே பெயரியலிலும் இவ்விகுதிகள் பற்றிப் பேசியிருக்க வேண்டும் தொல்காப்பியர். அல்லது வினையியலிலும் பெயருக்குரிய உதாரணங்களைக் காட்டியாக வேண்டும். அவ்வாறு காட்ட முடியாத நிலையில் இச்சூத்திரங்கள் வினைச்சொல்லைப் பற்றியே குறிப்பிடுகின்றன எனக் கருதலாம்.

வினைச்சொற்களில் இவ்விகுதிகளை வைத்து அவற்றின் திணை, பாலை நிர்ணயிக்க முடியுமேயன்றி, பெயர்ச்சொல்லில் நிர்ணயிக்க முடிவதில்லை. இளம்பூரணர் குறிப்பிட்டதுபோல் கொற்றன் என்ற சொல் உயர்திணையையும், அஃறிணையையும் குறிக்கும். எனவே திரிபின்றித் திணை, பாலைக் காட்டும் பண்பு வினைச்சொற்களுக்கே உண்டு.

ஒரு சில பெயர்ச் சொற்கள் விகுதியால் திணை, பாலைக் காட்டுவதற்கு முடியுமாயினும் ஆயிரக்கணக்கான பெயர்ச் சொற்கள் எவ்வித விகுதியுமின்றித் திணை, பாலைக் காட்டும். பெயரில் திணை, பாலை அறிவது அவற்றின் விகுதியால் அல்ல என்பதும், அவை காட்டும் பொருளை அடிப்படையாகக் கொண்டது என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. அவன் போன்ற சொற்கள் விகுதியால் ஆண்பாலைக் காட்டினும் "அகத்தியலிங்கம்", "மீனாட்சி", "காமாட்சி" போன்ற ஆயிரக்கணக்கான சொற்கள் ஈற்றினால் அல்லது விகுதியினால் திணையைக் காட்டுவதில்லை. இதனால்தான் பெயரியலில்

**இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்**
**உரியவை உரிய பெயர்வயி னான** *(646)*

எனக் கூறிப் போந்தார். இதற்கு உரை எழுதப் போந்த பல்வேறு உரையாசிரியர்களும் பலபடக் கூறிச் செல்லுவதைக் காணலாம்.

இளம்பூரணர் அவன், பெண்மகன், சாத்தன் என்ற னகர ஈற்றுச் சொற்களைக் காட்டி இவை முறையே ஆண்பாலையும், பெண்பாலையும், அஃறிணை ஆண்பாலையும் காட்டும் எனக் குறிப்பிடுவார். இதைப் போன்றே பல்வேறு பால்களைக் காட்டும் னகர, இகர, உகர ஈறுகளைத்

தந்து தன் நிலையை எடுத்துக்காட்டுவார். மேலும் "வினைச்சொற்போல இன்ன ஈறு இன்னபாற்கு உரித்தெனப் பெயர்ச்சொலினீறு பற்றி உணர்த்தலாகாமையின், உரியவை உரிய என்றார்" எனக் கூறுவது இங்குக் கருதத்தக்கது. இதே நிலையைத்தான் பிற உரையாசிரியர்களிடமும் காணலாம். இது பற்றி விளக்கமாக ஆராய்ந்துள்ளார் சண்முகம் (1982).

பெயரோடும் வரும் என்று எண்ணும் தெய்வச்சிலையார் ஈறுகளுக்கு உதாரணம் தரும்போது தடுமாறுகின்ற நிலையைக் காண்கிறோம். பகர இறுதிக்குப் பெயரில் உதாரணம் தர முடியாது "பகர இறுதி அஃறிணைப் பெயராலல்லது வாராது" எனக் கூறுவதும், ஒன்றன்பாலில் அது, ஒன்று, இரண்டு என றகரத்திற்கும், டகரத்திற்கும் எண்ணுப்பெயர்களைத் தந்து நிற்பதும், பன்மை காட்டும் ஆ, வ என்ற விகுதிகளுக்கு யா, வருவ என்பவற்றைக் காட்டுவதும் இவரது தடுமாற்றத்தினை உணர்த்தும். எண்ணுப்பெயர்களில் நான்கு, ஏழு போன்ற கு, ழு இறுதிகளும் உள்ளன என்பது இங்கு நினைவுகூரத் தக்கது. இதைப் போன்றே வருவ என்பது வினையடியாக வருவதாகும். இவ்வீறுகள் வினையில் மாத்திரமே வரும் என்று கொண்டால் இத்தகைய தடுமாற்றத்திற்கு இடம் இராது.

## ஒருமை - பன்மை வரிசை முறை

வினையியலில் தன்மை, முன்னிலை, படர்க்கை விகுதிகள் பற்றிக் கூறும்போது தன்மையிலும், அஃறிணையிலும் பன்மை விகுதிகளை முதலில் தந்து, பின்னர் ஒருமை விகுதிகளைத் தருவது வியப்பாகவே உள்ளது. தன்மையில் முதலில்

**அவை தாம்,**
**அம் ஆம் எம் ஏம் என்னுங் கிளவியும்**
.. .. .. .. .. .
.. .. .. .. .. .
**பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே** *(687)*

என முதலில் பன்மை விகுதிகளைத் தந்து அதன் பின்னரே

**க ட த ற என்னும்,**
.. .. .. ..
.. .. .. .
**தன்வினை உரைக்குந் தன்மைச் சொல்லே** *(688)*

எனக் கூறுவதும், இதேபோன்று அஃறிணையிலும்

**அ ஆ வ என வரூஉம் இறுதி**
**அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை** *(701)*

என முதலில் பன்மையைக் கூறி அதன் பின்னர்

**ஒன்றன் படர்க்கை த ற ட ஊர்ந்த**
**குன்றிய லுகரத்து இறுதியாகும்** *(702)*

என ஒருமையைக் கூறுவதும் நினைவுகூரத்தக்கது. ஆனால் முன்னிலை, படர்க்கை, ஆண், பெண்பால் போன்றவற்றில் ஒருமையே முன்னர்க் கூறப்படுகிறது. இதன் காரணம் விளங்கவில்லை. ஆனால் இந்நூலின்கண் ஒருமை முன்னரும், பன்மை பின்னருமே கூறப்படுகின்றன.

## தொல்காப்பியத்தில் இவ்விகுதிகளின் வரவு

தொல்காப்பியம் பால் காட்டும் பல்வேறு விகுதிகளைப் பற்றிக் கூறினும் ஒரு சில விகுதிகளே அதன்கண் வந்துள்ளன. தன்மை ஒருமை விகுதிகளாகக் கு, டு, து, று, என், ஏன், அல் என்ற ஏழு விகுதிகளை அது கூறியிருப்பினும் இவற்றுள் எதுவும் தொல்காப்பியத்தில் காணப்படவில்லை. இது ஒரு குறையோ அல்லது தவறோ அன்று. ஒரு நூலின்கண் சொல்லப்படும் எல்லா இலக்கணக் கூறுகளுமோ அல்லது எல்லா உருபுகளுமோ அந்த நூலில் வரவேண்டிய அவசியம் இல்லை. ஆசிரியர் எழுதுவது முழு மொழிக்குரிய இலக்கணமேயன்றி தம் நூலுக்குரிய இலக்கணமன்று. ஆனால் அவர் நூலில் வந்து அதுபற்றி அவர் தம் நூலில் குறிப்பிடாமல் இருந்தால் அது குற்றமாகும். எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியத்தில் 'கு' வந்து தன்மை ஒருமை விகுதியாக அது குறிப்பிடப்படாமல் இருந்தால் அது ஒரு சிறந்த இலக்கணம் ஆகாது.

எனினும் நம்மால் எழுதப்படும் இலக்கணங்களில் எல்லாவற்றையும் சொல்லிவிட முடிவதில்லை. காரணம் மொழி என்பது பரந்துபட்ட ஒன்று. ஆனால் இலக்கணங்களோ அவ்வாறுஇல்லை.அதனால்தான்மொழிகளுக்குப் புதிய புதிய இலக்கணங்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. புதுப்புதுக் கொள்கைகள் உருவாக உருவாக மொழிகளில் காணப்படும் சிக்கல்கள் தெளிவாகின்றன. எனவே சிக்கல்கள் நிறைந்த மொழியின் எல்லாப் பண்புகளையும் எந்த இலக்கணமும் முழுமையாகச் சொல்லமுடியாது. பாணினிக்குப் பின்னரும் பல இலக்கணங்கள் சமஸ்கிருத மொழிக்குத் தோன்றியுள்ளன. இதுபோன்றே எத்தனையோ இலக்கணங்கள் ஆங்கில மொழிக்கும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. எனினும் ஆங்கில மொழியில் உள்ள எல்லா இலக்கணக் கூறுகளுக்கும் முழுமையான விளக்கம் வெளிவந்துவிட்டது எனக் கூறமுடியாது. இலக்கணியின் இலக்கணக் கொள்கைகள் புதிதாக உருவெடுக்கும் போதெல்லாம் புதிய விளக்கங்கள் தோன்றும். எனவே இலக்கணம் எழுதுதல் என்பது ஒரு ஓய்வு ஒழிவு இல்லாத மனித சமுதாயத்தின் செயலே

ஆகும். உலகம் உள்ளவரை, அறிவு வளர வளரப் புதிய புதிய இலக்கணங்களும், கொள்கைகளும் வந்துகொண்டே இருக்கும். இந்நிலையில் எந்த இலக்கணமும் அது எந்தக் காலத்திலும் எழுதப்பட்டிருந்தாலும் முடிவான முழுமையான இலக்கணம் ஆகாது. இதற்குத் தொல்காப்பியமும் விதிவிலக்கன்று.

*அகத்தியலிங்கம், ச. 1983.* **சங்கத்தமிழ் - 2 வினையியல் (தன்மை முன்னிலை விகுதிகள்).** *அண்ணாமலை நகர்: அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழக வெளியீடு. பக். 20 - 29.*

## திருக்குறள் - பஞ்சாபி மொழிபெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா


**முனைவர் தார்லோச்சன் சிங் பேடி** அவர்கள் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்த திருக்குறள் நூலின் வெளியீட்டு விழா 12.02.2013 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் நடைபெற்றது. **பேராசிரியர் ப. மருதநாயகம்** அவர்கள்தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நிறுவனப் பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.






## செம்மொழித் தமிழ்த் தரவக உருவாக்கப் பணியரங்கம்

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மொழித் தொழில்நுட்பத் துறையில் 10.03.2013 அன்று செம்மொழித் தமிழ்த் தரவக உருவாக்கப் பணியரங்கம் நிறுவனக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இப்பணியரங்கின் ஒருங்கிணைப்பாளராக இணை ஆய்வறிஞர் **முனைவர் கோ. பழனிராசன்** செயல்பட்டார். இப்பணியரங்கில் **பேராசிரியர் செல்வக்கணபதி, முனைவர் ச.பொ. சீனிவாசன், பேராசிரியர் எம். சுசீலா, திரு இரா. அகிலன், திரு சு. கார்த்திகேயன், முனைவர் பா. ராஜா, பேராசிரியர் பாலறாவாயன், பேராசிரியர் அரங்க. சுப்பையா, பேராசிரியர் இளமுருகு, திரு. சொக்கலிங்கம்** முதலியோர் கலந்துகொண்டனர்.





# பயிலரங்குகள்

## பயிலரங்கு 1

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரி வரலாற்றுத் துறையும் இணைந்து "**தொல்லியல், கல்வெட்டியல் காட்டும் தமிழ்ச் செவ்வியல் காலத் தமிழக வரலாறு**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2013 முதல் 11.01.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மு. காயத்திரி தேவி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 2

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சேலம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து "**பண்பாட்டியல், சமூகவியல், வரலாற்றியல் நோக்கில் புறநானூறு**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2013 முதல் 11.01.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ப. சுதந்திரம் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 3

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் பழனியில் உள்ள அருள்மிகு பழனியாண்டவர் கலை அறிவியல் மகளிர் கல்லூரியும் இணைந்து "**மனித இயங்குதளத்தில் சங்க இலக்கியக் கோட்பாட்டுப் பதிவுகள்**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 02.01.2013 முதல் 11.01.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ஜி. தேன்மொழி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 4

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இலக்கியவியல் துறையும் இணைந்து "**செம்மொழித் தமிழும் சிலப்பதிகாரமும்**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 03.01.2013 முதல் 12.01.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் சிலம்பு நா. செல்வராசு இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.






## பயிலரங்கு 5

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்செங்கோடு கே.எஸ்.ஆர். கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து "**தொல்காப்பியம் கற்பித்தல் உத்திகள்**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 21.01.2013 முதல் 30.01.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் மா. கார்த்திகேயன் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 6

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் காரைக்காலில் உள்ள அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து “**திணைக்கோட்பாடும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியமும்**” என்னும் பொருண்மையில் 21.01.2013 முதல் 30.01.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் க. சேகர் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 7

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சிராப்பள்ளியில் உள்ள உலகத் தமிழ்மொழி, மெய்யியல், பண்பாட்டு ஆய்வு நிறுவனமும் இணைந்து “**ஒப்பாய்வு நோக்கில் செவ்விலக்கியக் கோட்பாடுகள்**” என்னும் பொருண்மையில் 22.01.2013 முதல் 31.01.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் க. நெடுஞ்செழியன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 8

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து “**இளங்கலை முதுகலை மாணவர்களுக்குச் சங்க இலக்கியத்தைக் கற்பித்தல்**” என்னும் பொருண்மையில் 28.01.2013 முதல் 06.02.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் பி. ஜெயகிருஷ்ணன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 9

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் விருத்தாச்சலம் திரு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து “**தொல்காப்பியம் - மரபுவழிப் பார்வையும் மொழியியல் பார்வையும்**” என்னும் பொருண்மையில் 28.01.2013 முதல் 06.02.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் ஆர். கருணாநிதி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 10

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறையும் இணைந்து “**திணைநிலை நோக்கில் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள்**” என்னும் பொருண்மையில் 28.01.2013 முதல் 06.02.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் சா. உதயசூரியன் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 11

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரித் தமிழாய்வுத் துறை 29.01.2013 முதல் 07.02.2013 முடிய “**ஆற்றுப்படை இலக்கியங்களின் தனித்தன்மையும் வளர்ச்சியும்**” என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் மு. சாதிக்பாட்சா இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 12

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரித் தமிழ்த் துறை 04.02.2013 முதல் 14.02.2013 முடிய “**தொல்காப்பியம் - மரபுவழிப் பார்வையும் மொழியியல் பார்வையும்**” என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் தி. சிவகாமி இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 13

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறை 06.02.2013 முதல் 15.02.2013 முடிய “**தொல்காப்பிய மொழிவிளக்க மரபுகளும் மொழியியலும்**” என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் வீ. ரேணுகாதேவி இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 14

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறை 08.02.2013 முதல்





*17.02.2013 முடிய* **"பண்பாட்டியல், சமயவியல் நோக்கில் மணிமேகலை"** *என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் இரா. சந்திரசேகரன் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.*

## பயிலரங்கு 15

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருநெல்வேலி இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரித் தமிழ்த் துறை 10.02.2013 முதல் 20.02.2013 முடிய* **"தொல்காப்பியரின் எழுத்து, சொல் இலக்கணக் கோட்பாட்டு வளர்ச்சி"** *என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் இரா.ச. சுகிர்தா பஸ்மத் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.*

## பயிலரங்கு 16

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருச்சி காவேரி மகளிர் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து* **"தொல்காப்பியம் - மரபு வழித்தளத்தில் மொழியியல் பார்வை"** *என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 18.02.2013 முதல் 27.02.2013 வரை பத்து நாள் நடைபெற்றது. முனைவர் ச. இராமலெட்சுமி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.*

## பயிலரங்கு 17

*செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ் உயராய்வு மையமும் இணைந்து* **"தமிழ்ச் செவ்வியல் இலக்கிய, இலக்கண ஆய்வு மரபுகள்"** *என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 01.03.2013 முதல் 10.03.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ச. திருஞானசம்பந்தம் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.*

*இப்பயிலரங்கின் தொடக்க விழா 01.03.2013 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் ச. திருஞானசம்பந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார். திருவையாறு அரசர் கல்லூரிச் செயலர் திரு. எஸ். ரெகுநாதன் முன்னிலை வகித்தார். திருவையாறு அரசர் கல்லூரி முதல்வர் முனைவர் தி.ந. ஆராவமுதன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி தொடக்கவுரை ஆற்றினார். திருச்சியிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தனிமாவட்ட வருவாய் அலுவலர் திரு. செ. முகமது ஆரீப் வாழ்த்துரை வழங்கினார். திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஐ.ஜான்சிராணி நன்றி நவிலத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.*

*இந்தப் பயிலரங்கில் கீழ்வரும் அறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.*

**முனைவர் இரா. ஜெகதீசன்**
**முனைவர் அ. தனலெட்சுமி**
**முனைவர் சோ.ந. கந்தசாமி**
**முனைவர் பா. மதிவாணன்**
**முனைவர் உ. அனார்கலி**
**முனைவர் சு. தமிழ்வேலு**
**முனைவர் பா. நடராசன்**
**முனைவர் நா. தனராசன்**
**முனைவர் கோ. சதீஸ்**
**முனைவர் மூ. பரிமணன்**
**முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன்**
**முனைவர் இரா. இளவரசு**
**முனைவர் இரா. வெங்கடேசன்**
**முனைவர் சி. செல்வராஜ்**
**முனைவர் இராதா செல்லப்பன்**
**முனைவர் கு. இராசரெத்தினம்**
**முனைவர் பி. தர்மராஜ்**
**முனைவர் பா. வேலம்மாள்**
**முனைவர் யாழ். சு. சந்திரா**
**முனைவர் கா. இராமலிங்கம்**

**முனைவர் ஜ. ஜான்சிராணி**
**முனைவர் ப. பத்மநாபப்பிள்ளை**
**முனைவர் சு. அழகேசன்**
**முனைவர் இ. சேனாவரையன்**
**முனைவர் வ. கிருஷ்ணன்**
**முனைவர் சா. உதயசூரியன்**
**முனைவர் இரா. சீனிவாசன்**
**முனைவர் மோ. செந்தில்குமார்**
**முனைவர் சு. துரை**
**முனைவர் பெ. மாதையன்**
**முனைவர் மு. முத்துவேலு**
**முனைவர் ப. வேல்முருகன்**
**முனைவர் கி. மணிமாறன்**
**முனைவர் சி. மனோகரன்**
**முனைவர் சு. இரவிச்சந்திரன்**

10.03.2013 அன்று மாலை 3 மணியளவில் பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் பி. தர்மராஜ் வரவேற்புரையாற்றினார். திருவையாறு அரசர் கல்லூரிச் செயலர் திரு. எஸ். ரெகுநாதன் அவர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர் தி.ந. ஆராவமுதன் தலைமையுரை ஆற்றினார். கோவை மாவட்ட ஆட்சியர் திருமிகு மு. கருணாகரன் பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன முதுநிலைப் ஆய்வறிஞர் பேராசிரியர் க. இராமசாமி அவர்கள் பயிலரங்க நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். இறுதியாக முனைவர் ச. திருஞானசம்பந்தம் நன்றி கூறினார்.

## பயிலரங்கு 18

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தென்காசியில் உள்ள தென்பொதிகைத் தமிழ்ச் சங்கமும் இணைந்து "**துறையிடை அணுகுமுறையில் சங்க இலக்கியம்**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 11.03.2013 முதல் 20.03.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. திரு.ச. துரைமுருகன் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 19

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தருமபுரம் ஆதீனக் கலைக் கல்லூரித் தமிழ் உயராய்வுத் துறையும் இணைந்து "**பண்பாட்டு வளர்ச்சியில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பங்கு**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 13.03.2013 முதல் 22.03.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் ச. சுப்புரத்தினம் இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 20

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் கும்பகோணம் அரசுக் கலைக் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து "**தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்தொள்ளாயிரமும் முத்தொள்ளாயிர மரபும்**" என்னும் தலைப்பில் நடத்திய பயிலரங்கம் 07.12.2013 முதல் 16.03.2013 வரை பத்து நாள்கள் நடைபெற்றது. முனைவர் கே.ஏ. ஆனந்த ரவிசாஸ்திரி இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராக விளங்கினார்.

## பயிலரங்கு 21

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இணைந்து "**செவ்வியல் தமிழ் இலக்கியங்களை எண்ணிம விழியமாக** (Digital Video) **மாற்றுதல்**" என்னும் பொருண்மையில் 11.12.2013 முதல் 20.12.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் எஸ். நாகரத்தினம் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 22

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் நாமக்கல் செல்வம் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து "**சங்க இலக்கிய ஆய்வுகள்வழி வெளிப்படும் ஆய்வியல் நெறிகள்**" என்னும் பொருண்மையில் 13.12.2013 முதல் 22.12.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் ஆர். வெங்கடேசன் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 23

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி இயற்பியல் துறையும் இணைந்து "**பழந்தமிழ் இலக்கண மரபுகளும் இக்கால இலக்கணப் போக்குகளும்**" என்னும் பொருண்மையில் 14.12.2013 முதல் 24.12.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர்

கே. பிரேம் நசீர் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 24

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சென்னை டாக்டர் உ.வே.சா. நூல்நிலையமும் இணைந்து "**எட்டுத்தொகை ஓலைச்சுவடிகள்**" என்னும் பொருண்மையில் 18.12.2013 முதல் 27.12.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் கோ. உத்திராடம் இந்தப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 18.12.2013 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவில் டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய மதிப்பியல் காப்பாட்சியர் முனைவர் பெ. சுயம்பு அனைவரையும் வரவேற்றார். டாக்டர் உ.வே.சா. நூல்நிலையத் தலைவரும் வேலூர் வி.ஐ.டி. பல்கலைக்கழக நிறுவனருமான டாக்டர் ஜி. விஸ்வநாதன் தலைமையுரையாற்றினார். டாக்டர் உ.வே.சா. நூல்நிலையத் துணைத்தலைவர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி தொடக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலுவும் டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய ஆட்சிக் குழு உறுப்பினர் டாக்டர் அ.மு. சுவாமிநாதனும் வாழ்த்துரை வழங்கினார்கள். முனைவர் கோ. உத்திராடம் நன்றி நவிலத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

இப்பயிலரங்கில் பின்வரும் அறிஞர்கள் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்**
**முனைவர் தி. மகாலட்சுமி**
**முனைவர் கோ. உத்திராடம்**
**வித்துவான் இரா. ஜெயலட்சுமி**
**முனைவர் ப. மருதநாயகம்**



**முனைவர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் அ. சதீஷ்**
**முனைவர் த. பூமிநாகநாதன்**
**மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியன்**
**திருமிகு இரா. லோபாஷினி**
**திரு. சா. சாய்ராமன்**
**முனைவர் ஆ. தசரதன்**
**முனைவர் தி. சத்தியமூர்த்தி**
**முனைவர் இரா. வெங்கடேசன்**
**முனைவர் ய. மணிகண்டன்**
**திரு. நெல்லை நெடுமாறன்**
**முனைவர் மணிமாறன்**
**முனைவர் சு. தாமரைப்பாண்டியன்**
**முனைவர் இரா. மாதவன்**
**பேராசிரியர் ம.வே. பசுபதி**
**முனைவர் கோ. பன்னீர்செல்வம்**
**முனைவர் த. இராஜேஸ்வரி**
**முனைவர் வீ. அரசு**
**முனைவர் பா. இராஜா**
**திரு. இரா. அகிலன்**
**திரு. கை. பாஸ்கர்**
**முனைவர் கி. ஜெயகுமார்**
**முனைவர் மோ.கோ. கோவைமணி**
**முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி**
**முனைவர் வ. ஜெயதேவன்**
**முனைவர் ப. பெருமாள்**
**திரு. அ. முருககசுவாமிநாதன்**

இந்தப் பயிலரங்கின் நிறைவு விழா 27.12.2013 அன்று மாலை நான்கு மணியளவில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகைபுரிந்தவர்களை முனைவர் கோ. உத்திராடம் வரவேற்றார். டாக்டர் உ.வே.சா. நூல்நிலையப் பொதுக்குழு உறுப்பினர் மகாவித்துவான் வே. சிவசுப்பிரமணியன் தலைமையுரையாற்றினார். டாக்டர் உ.வே.சா. நூல்நிலைய ஆட்சிக்குழு உறுப்பினரும் தினமலர் ஆசிரியருமான டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி பயிலரங்கில் பங்கேற்ற மாணவர்களுக்குச் சான்றிதழும் பரிசுநூல்களும் வழங்கி வாழ்த்திப் பேசினார். டாக்டர் உ.வே.சா நூல்நிலையச் செயலாளரும் இந்தியத் தொல்லியல் துறையின் மேனாள் கண்காணிப்பாளருமான முனைவர் தி. சத்தியமூர்த்தி நிறைவுரை நிகழ்த்தினார். இறுதியாக முனைவர் பெ. சுயம்பு நன்றி நவின்றார்.

## பயிலரங்கு 25

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரித் தமிழ்த் துறையும் இணைந்து "**செவ்வியல் இலக்கியங்களில் தொல்காப்பிய அக, புறத்திணைக்**

**கோட்பாடுகள்**" என்னும் பொருண்மையில் 18.12.2013 முதல் 27.12.2013 வரை பத்து நாள் பயிலரங்கினை நடத்தின. முனைவர் இரா. இளவரசு இப் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

இப்பயிலரங்கின் தொடக்க விழா 18.12.2013 அன்று காலை பத்து மணியளவில் நடைபெற்றது. அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியின் தாளாளர் திரு. வை. அய்யன் கோடீஸ்வரன் இவ்விழாவினைக் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். முனைவர் இரா. இளவரசு வரவேற்புரை ஆற்றினார். அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி முதல்வர் முனைவர் சோ. பாஸ்கரன் அவர்கள் தலைமையுரையாற்றினார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் முனைவர் பொற்கோ அவர்கள் சிறப்புரையாற்றினார். விருதுநகர் மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் முனைவர் க. பசும்பொன் கருத்துரை வழங்கினார். அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி முதுகலைத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் க. சிவனேசன் நன்றி நவிலப் பயிலரங்கத் தொடக்க விழா இனிதே நிறைவடைந்தது.

இந்தப் பயிலரங்கில் பின்வரும் ஆய்வறிஞர்கள் பங்கேற்றுத் தங்கள் ஆய்வுரைகளை வழங்கினர்.

**முனைவர் கா. பாஸ்கரன்**
**முனைவர் த. இரத்னமாலா**
**முனைவர் இரா. குமார்**
**முனைவர் வீ. இரேணுகாதேவி**
**முனைவர் இரா. வெங்கடேசன்**
**முனைவர் ச. கண்மணி**
**முனைவர் அரங்க. பாரி**
**முனைவர் ப.சு. மூவேந்தன்**
**முனைவர் இ. சேனாவரையன்**
**முனைவர் ஜா. இராஜா**
**முனைவர் கு. சிவமணி**
**முனைவர் ப. மருதநாயகம்**
**முனைவர் பா. மதிவாணன்**
**முனைவர் மு. பாண்டி**
**முனைவர் பு.சி. கணேசன்**
**முனைவர் மு. மதியழகன்**
**முனைவர் ரெ. முத்துராஜன்**
**முனைவர் கி. பார்த்திபராஜா**
**முனைவர் செ. கிளிராஜ்**
**முனைவர் வ. கிருஷ்ணன்**
**முனைவர் ச. திருஞானசம்பந்தம்**
**முனைவர் பா. பொன்னி**
**முனைவர் ச. பாரிஜாதம்**
**முனைவர் ந. மணிகண்டன்**
**முனைவர் ந. சுலோசனா**




**முனைவர் ஓ. பாலகிருஷ்ணன்**
**முனைவர் க. சிவனேசன்**
**முனைவர் ந. வேலுமணி**
**முனைவர் க. முருகேசன்**
**முனைவர் த. திலிப்குமார்**

27.12.2013 அன்று மாலை 3.30 மணியளவில் பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. இவ்விழாவில் முனைவர் க. சிவனேசன் வரவேற்புரை ஆற்றினார். அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி முதல்வர் சோ. பாஸ்கரன் தலைமை தாங்கினார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் முனைவர் மு. முத்துவேலு நிறைவுரை நிகழ்த்தினார். இறுதியாக முனைவர் இரா. இளவரசு நன்றி கூறினார்.

## பயிலரங்கு 26

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் ஜெயங்கொண்டம் மாடர்ன் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறை 18.12.2013 முதல் 27.12.2013 முடிய "**தொல்காப்பிய இலக்கணம் கற்பித்தல் - மொழியியல் அணுகுமுறையில்**" என்னும் பொருண்மையில் பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தியது. திரு. சி. சுரேஷ் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 27

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த் துறை 18.12.2013 முதல் 27.12.2013 முடிய "**பழந்தமிழ் உரையாசிரியர்களின் நடைக்கோட்பாடு**" என்னும் பொருண்மையில் பத்து நாள்கள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் சே. செந்தமிழ்ப்பாவை இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 28

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் சிவகாசி காளீசுவரி கல்லூரித் தமிழ்த் துறை 20.12.2013 முதல் 29.12.2013 முடிய "**தொல்காப்பிய உரையாசிரியர்கள்**" என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் மா. பரமசிவன் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 29

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை மற்றும் அறிவியல் கல்லூரி 20.12.2013 முதல் 29.12.2013 முடிய "**தொல்காப்பிய யாப்பும் பிற மரபிலக்கண நூல்களும்**" என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் எஸ். திருநாவுக்கரசு இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## பயிலரங்கு 30

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் திருச்சி தேசியக் கல்லூரித் தமிழ்த் துறை 20.12.2013 முதல் 29.12.2013 முடிய "**தொல்காப்பியம் எழுத்தும் சொல்லும் - மரபுப் பார்வையும் மொழியியல் பார்வையும்**" என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் கே. ராஜரத்தினம் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல் பட்டார்.

## பயிலரங்கு 31

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன நிதியுதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை 26.12.2013 முதல் 04.01.2013 முடிய "**தமிழ் மரபிலக்கணங்களில் தொடரியல் ஆய்வுகுறித்த மொழியியல் பயிற்சி**" என்னும் பொருண்மையில் பத்து நாள் பயிலரங்கை நடத்தியது. முனைவர் எம். கணேசன் இந்தப் பயிலரங்க ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்.

## கூர்ந்தாய்வுக் குழுக்கூட்டம்

02.08.2013 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் 2013-14ஆம் நிதி ஆண்டுக்கான பயிலரங்கு, கருத்தரங்கு விண்ணப்பங்களைக் கூர்ந்தாய்வு செய்யும் குழுக்கூட்டம் நிறுவன ஆய்வறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன், பேராசிரியர் பா.ரா. சுப்பிரமணியன், பேராசிரியர் ப. மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# ஆய்வு உதவித்தொகைகள்

நாற்பத்தொரு செம்மொழித் தமிழ் நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் உதவித்தொகைகள் வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் நூற்றுக்கணக்கான இளம் தமிழாய்வாளர்கள் பயனடைந்துள்ளனர்.


2013ஆம் ஆண்டு பின்வரும் முனைவர் பட்ட மேலாய்வாளர் ஒருவரும் 31 முனைவர் பட்டஆய்வாளர்களும் எழுத்துத் தேர்வும் நேர்காணலும் நடத்தித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## முனைவர் பட்ட மேலாய்வு உதவித்தொகை பெற்றவர்

1. **முனைவர் கா. அய்யப்பன்**

## முனைவர் பட்ட ஆய்வுக்கான உதவித்தொகை பெற்றவர்கள்

1. **ச. கார்த்திகேயன்**
2. **செ. வசந்தி**
3. **ரா. கோடீஸ்வரி**
4. **த. தட்சணாமூர்த்தி**
5. **அ. இளையராஜா**
6. **த. கௌரி**
7. **ப. சுதா**
8. **இரா. புவிதா**
9. **வீ. அன்னபூரணி**
10. **சி. ரகு**
11. **பா. மணிவண்ணன்**
12. **கோ. சாந்தி**
13. **இரா. கிருத்திகா**
14. **செ. ஜமுனா**
15. **தி. சக்திமுப்புடாதி**
16. **ஞா. சுபஸ்ரீ**
17. **ப. பிரதீபா**
18. **அ. விசுவநாதன்**
19. **சா. கருணாகரன்**
20. **இல. மங்கல லட்சுமி**
21. **தெ. சாந்தி**
22. **க. முருகன்**
23. **ப. நதியா**
24. **இரா. அன்னலட்சுமி**
25. **த. ஜெயஸ்ரீ**
26. **எ. சுதாகர்**
27. **ஜெ. ஜெயசித்ரா**
28. **இரா. மூர்த்தி**
29. **க. கண்ணகி**
30. **ஆ. இராஜகுமாரி**
31. **ச. கௌசல்யா**




நூல் : **திருக்குறள் பஞ்சாபி மொழிபெயர்ப்பு**

ஆசிரியர் : முனைவர் தார்லோச்சன் சிங் பேடி

விலை : ₹ 300/-

வெளியீடு : செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

# செம்மொழித் தமிழுக்கான
# குடியரசுத் தலைவர் விருதுகள் (2009-10)

செம்மொழித் தமிழில் அறிவுத் திறமும் நூற்புலமையும் கொண்டவர்களுக்குத் தொல்காப்பியர் விருது (ரூ.5 இலட்சம்), குறள்பீடம் விருது (ரூ.5 இலட்சம்), இளம் அறிஞர் விருது (ரூ.1 இலட்சம்) ஆகியவை வழங்கப்படுகின்றன. அந்த வகையில், 2009-10, 2010-11ஆம் ஆண்டுகளுக்குரிய செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருதுகள் 09.10.2013 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்களால் குடியரசுத் தலைவர் மாளிகையில் நடந்த விழாவில் வழங்கப்பட்டன.



**தொல்காப்பியர் விருது : பேராசிரியர் ஐராவதம் மகாதேவன்**



**குறள்பீடம் விருது: பேராசிரியர் ஜரோஸ்லாவ் வாசெக்**

# இளம் அறிஞர் விருது



முனைவர் தி. சுரேஷ்



முனைவர் சே. கல்பனா



முனைவர் இரா. சந்திரசேகரன்



முனைவர் வாணி அறிவாளன்



முனைவர் சோ. முத்தமிழ்ச்செல்வன்

# செம்மொழித் தமிழுக்கான
# குடியரசுத் தலைவர் விருதுகள் (2010-11)

## தொல்காப்பியர் விருது



பேராசிரியர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்)

## குறள்பீடம் விருது



பேராசிரியர் ஜான் ரால்ஸ்டன் மார்

# இளம் அறிஞர் விருது



முனைவர் து. சங்கையா



முனைவர் அ. ஜெயக்குமார்



முனைவர் ஆ. மணி



முனைவர் சி. சிதம்பரம்



முனைவர் க. சுந்தரபாண்டியன்



செம்மொழித் தமிழுக்கான குடியரசுத் தலைவர் விருது (2009-10, 2010-11) பெற்றவர்களின் குழுப்படம்

நாள்: 9.10.2013 (புதன் கிழமை) இடம்: குடியரசுத் தலைவர் மாளிகை, புதுதில்லி

# பணிக்குழாம்

இயக்குநர்

**பேராசிரியர் இரா. சந்திரசேகரன்**

*ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் கூ.மு. புவனேஸ்வரி

முனைவர் ந. தேவி

முனைவர் க. நர்மதா

முனைவர் இரா. அருள்மணி

முனைவர் கு. ஜெயகுமாரி

*இளநிலை ஆராய்ச்சி அலுவலர்கள்*

முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்

முனைவர் சு. ஏழுமலை

முனைவர் மு. செல்வதுரை

முனைவர் சே. கரும்பாயிரம்

முனைவர் த. சரவணன்

முனைவர் இரா. வெங்கடேசன்

முனைவர் ந. பெரியசாமி

முனைவர் வ. மாரியப்பன்

முனைவர் ம. தமிழ்வாணன்

முனைவர் அ. ஆரோக்கியதாசு

முனைவர் மா. சுசிலா

முனைவர் ப. கண்ணதாசன்

முனைவர் சுப. வேல்முருகன்

முனைவர் வே. அழகுமுத்து

முனைவர். ம. நாகராஜன்

முனைவர் சி. இராமச்சந்திரன்

*இளநிலை ஆய்வு வளமையர்கள்*

திருமதி ம. தாமரைச்செல்வி

திரு. து.ச.ரா. ராஜேஷ்குமார்

திரு. கி. கண்ணன்

திரு. கோ. சந்திரசேகர்

*தொழில்நுட்பப் பணியாளர்கள்*

திரு. த. செந்தில்குமார் *(நிரலாளர்)*

திரு. சு. கார்த்திகேயன் *(நிரலாளர்)*

முனைவர் இரா. அகிலன் *(நிரலாளர்)*

திரு. அ. முருக சுவாமிநாதன் *(நிரலாளர்)*

திரு. இரா. சுந்தரகணபதி *(கணினி நிருவகிப்பாளர்)*

திரு. மு. இராசசேகர் *(இணையத்தள வடிவமைப்பாளர்)*

*நிருவாகப் பணியாளர்கள்*

திரு. கோ. புண்ணியமூர்த்தி
*(அலுவலகக் கண்காணிப்பாளர்)*

திரு. ஜா.வா. பாஸ்கரன்
*(இளநிலைக் கணக்கு அலுவலர்)*

திரு. மோ. முருகானந்தம் *(முதுநிலை எழுத்தர்)*

திரு. க. சங்கர் *(இளநிலை எழுத்தர்)*

திரு. அ. முருகேசன் *(இளநிலை எழுத்தர்)*

திருமதி இர. நளினா *(இளநிலை எழுத்தர்)*

*தரவு உள்ளீட்டாளர்கள்*

திரு. வெ. சிவப்பிரகாசம்

திருமதி சு. கீதா

திரு. தி.ஞா. அருள்ஒளி

திரு. மு. முனியசாமி

திரு. சோ. சரவணன்

*அனுப்புகை உதவியாளர்*

திரு. ம. கோவிந்தன்

*பன்னோக்கு உதவியாளர்கள்*

திருமதி. ந. ஜெயலட்சுமி

திருமதி. சி. அன்னபூரணி

தொல்காப்பியம்

எட்டுத்தொகை

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

பத்துப்பாட்டு

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

பதினெண் கீழ்க்கணக்கு

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்